සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2024

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024 / Second Term Test - 2024

ශ්‍රේණිය / தரம் / Grade: 11

# வரலாறு - I

කාලය / நேரம் / Time: 01 மணி

නම / பெயர் / Name ..........................................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ......................................

கவனிக்குக.

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
- ❖ 1 – 40 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடி இடுக.

---

1) புராதன காலத்துக்குரிய இலக்கிய,சமய,வம்சக் கதைகள் எழுதப்பட்டது,

1. கல்வெட்டுக்களில் 2. செப்பேடுகளில் 3. ஓலைச்சுவடிகளில் 4. பொற்தகடுகளில்

2) தாம் நேரடியாக காணாது ஏனையவர்கள் கூறிய தகவல்களை வைத்து இலங்கை தொடர்பாக எழுதி வைத்த எழுத்தாளர்,

1. இப்னு பதூதா 2. ரொபட் நொக்ஸ் 3. ரிபைரோ 4. பிளினி

3) தற்கால இலங்கை ஆதிவாசிகளுடன் கலாச்சார, உயிரியல் சமமான தன்மைகள் உள்ளதாக ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படும் மனித இனத்தவர் எக்காலத்தை சேர்ந்தவர்களாவர் ?

1. கற்காலத்தவர்கள் 2. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தவர்
3. முன் வரலாற்றுக் காலத்தவர் 4. வரலாற்றுக் காலத்தவர்

4) வெள்ளப் பெருக்கினால் வரும் ஆபத்தை தடுக்கும் தொழிநுட்பம் பற்றி அறியாததனால் முன் வரலாற்றுக் கால மக்கள் தமது வாழிடங்களை அமைத்துக் கொண்டது,

1. ஆற்றுச் சமவெளியின் மேல் பகுதியில் ஆகும்.
2. மலைப் பிரதேசங்களில் ஆகும்.
3. ஆற்றில் வெள்ளச் சமவெளியின் அருகில் ஆகும்.
4. ஆற்றின் வெள்ளச் சமவெளிக்கு அப்பால் ஆகும்.

5) அணை அமைத்தல் தொடர்பாக மிகப் பழமையான தகவல் கிடைக்கப்பெற்ற ஆறுயாதாகும்,

1. மகாவலி கங்கை 2. மல்வத்து ஓயா 3. கிரிந்தி ஓயா 4. கலா ஓயா

6) தொல்பொருளியளாலர்களால் புராதன தேவாலயம் ஒன்றின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்ட இடம்,

1. உடரஞ்சாமடம 2. பெல்லன்பெந்தி பெலஸ்ஸ
3. கல்பாய பிரதேசம் 4. தெதிகம பிரதேசம்

7) தற்கால பொற் கொல்லர்களுக்கும் சவாலான பூ வேலைப்பாடுகள் 21 உடன் கூடிய நெல்மணி அளவிலான நகையின் பகுதி கண்டெடுக்கப்பட்டது,

1. அபயகிரிய அகழ்வுகளில் இருந்தாகும். 2. இரணைமடுப்படிவில் இருந்தாகும்.
3. ஜேதவன அகழ்வுகளில் இருந்தாகும். 4. ருவன்வெலிசாய பகுதியில் இருந்தாகும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

8) பின்வரும் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறைப்படி ஒழுங்குபடுத்தினால் வரும் விடை ,

A. வெள்ளரச மரக்கிளைகளை நாட்டின் பல பிரதேசங்களில் நடல்.

B. தனது பத்தாவது அரச ஆண்டில் நாட்டின் கிராம எல்லைகளை அடையாளப்படுத்தல்.

C. பாரிய குளங்களை அமைத்தல்.

D. ருவன்வெலிசாய விஹாரையின் நான்கு நுழைவாயில்களிலும் தானம் வழங்குதல்.

1. BCDA 2. BADC 3. BCAD 4. ABCD

9) இலங்கை வரலாற்றில் தன்னை சக்விதி அரசன் என அறிமுகப்படுத்திய மன்னன்,

1. 1ம் காசியப்பன் 2. 2ம் இராஜசிங்கன்

3. குட்டகண்ணபயன் 4. கீர்த்தி சிறீ நிஸ்ஸங்கமல்லன்

10) குஞ்சா எனும் அலகை பயன்படுத்தி அளவிடப்பட்டது,

1. நீளம் 2. முகுர்த்தம் 3. காலம் 4. பாரம்

11) புராதன இலங்கையில் காணப்பட்ட கைத்தொழில்களும் அதனுடன் தொடர்புடைய கல்வெட்டுக்களும் வழங்கப்பட்டுள்ளன.சரியாக இணைத்து விடையை தெரிவு செய்க.

| (I) | (II) |
|---|---|
| 01) புடவை நெய்தல் | A. முத்துகல்ல கல்வெட்டு |
| 02) யானைத்தந்த கைத்தொழில் | B. மண்டகல கல்வெட்டு |
| 03) இரும்புக் கைத்தொழில் | C. வேகிரிய கல்வெட்டு |
| 04) தங்க ஆபரண உற்பத்தி | D. வெஹெரகம கல்வெட்டு |

1. DCAB 2. ABDC 3. ABCD 4. BCDA

12) சூழல் நேயத்துடனான அழகான பூங்காவை அமைக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தியமைக்கான உதாரணமாவது,

1. ரன்மசு பூங்கா 2. சீகிரியா பூங்கா 3. மகாமேகவன பூங்கா 4. நந்தன பூங்கா

13) சிகீரியா நீர் பூங்காவின் கால்வாய் தொகுதி சுருள் வடிவில் அமைக்கப்பட்டமைக்கான காரணமாக கருதக்கூடியதாவது,

1. வண்டல் படிவை படிய செய்வதற்காகும்.

2. கால்வாய் தொகுதியின் அழகை அதிகரிக்கச் செய்யவாகும்.

3. கால்வாயில் அடிப்பகுதியில் படியும் வண்டல் மண்ணை அகற்றுவதற்கு இலகுவாக இருப்பதற்காகும்.

4. நீர்ப் பூக்களின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்ளவாகும்.

14) புராதன சமூகம் அமைப்பில் “கூடின்” என அழைக்கப்பட்டவர்கள்,

1. பணக்கார வியாபாரிகள் 2. மீனவர்கள்

3. பொதுமக்கள் 4. வேலையாட்கள்

15) துறைமுகத்தில் இருந்து பெறப்பட்ட சுங்கவரி பௌத்த விகாரைக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட இடம்,

1. மாகம 2. சித்துள்பவ்வ 3. கொடவாய 4. வெஹெரகம

16) தமது பெண்பிள்ளைகளுக்கு சமையல் கலையில் தேர்ச்சி பெற வைப்பது பெற்றோர்களின் கடமையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள மூலாதாரம்,

1. சத்தர்மலங்காரய 2. சஹஸ்ஸவத்துபகரணய

3. தம்பியா அட்டுவாகெட்டபதய 4. ரஸவாஹினி

17) முதலாம் நகராக்கத்தின் ஆரம்ப நகரங்கள் இரண்டும் யாவை ?

1. அநுராதபுரம், யாப்பகுவ 2. பொலன்னறுவை,தம்பதெனிய

3. தம்பதெனிய, யாப்பகுவ 4. அநுராதபுரம்,மாகம



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

❖ A – D வரையான கூற்றுக்களூடாக 18, 19ம் வினாக்களுக்கு விடை தருக.

A. கலிங்க மாகனை விரட்டியடித்தல்.

B. இப்னு பதூதாவின் இலங்கை வருகை

C. கவிசிலுமின எழுதப்படல்

D. யுங்லோ பேரரசனால் செங்ஹோ சேனாதிபதி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படல்.

18) தம்பதெனிய இராசதானியுடன் தொடர்புடைய கூற்றுகளாவன,

1. A யும் C யும் 2. B யும் C யும் 3. C யும் D யும் 4. A யும் D யும்

19) கம்பளை காலத்துக்குரிய நிகழ்ச்சிகளாவது,

1. A யும் B யும். 2. B யும் C யும் 3. C யும் A யும். 4. B யும் D யும்

20) A,B நிரல்களை சரியாக பொருத்தினால் வரும் விடை,

| (A) | (B) |
|---|---|
| 01) குசுமான தேவி | A. தொன் ஜூவான் |
| 02) யமசிங்க பண்டார | B. டிகிரி குமாரன் |
| 03) கொனப்பு பண்டார | C. டோனா கதரினா |
| 04) முதலாம் இராஜசிங்கன் | D. தொன் பிலிப் |

1. CADB 2. CDBA 3. CDAB 4. BCDA

21) வலிவிற்ற சரணங்கர தேரரை சங்கராஜ பதவிக்கு நியமித்த மன்னன் யார் ?

1. சிறீ விஜய இராஜசிங்கன் 2. 2ம் இராஜசிங்கன்

3. சிறீ விக்ரம இராஜசிங்கன் 4. கீர்த்தி சிறீ இராஜசிங்கன்

22) ஐரோப்பாவின் மத்திய காலத்தில் இறந்த மொழியாக கருதப்பட்ட மொழி யாது ?

1. கிரேக்க மொழி 2. இலத்தீன் மொழி 3. கோத்திர மொழி 4. கத்தோலிக்க மொழி

23) மறுமலர்ச்சிக் காலத்தில் சித்திரக் கலையில் காணப்பட்ட விசேட அம்சம் யாது ?

1. சுயாதீன ஆக்கங்களுக்கு அவகாசம் வழங்கப்படாமை.

2. மதக் கருத்துகளை பிரதிபலிக்கும் படைப்புக்கள் உருவாக்கப்படல்.

3. இலௌகீக இரசணைக்கு முதலிடம் வழங்கப்படல்.

4. பிரிவின் பெயரால் படைப்புக்கள் உருவாக்கப்படல்.

24) புராதன காலத்தில் ஆசியா, ஐரோப்பா நாடுகளுக்கு இடையே வர்த்தகம் நடைபெற்ற மார்க்கங்கள் தொடர்புபட்டிருந்த பிரதான நகரம் எது ?

1. கைரோ 2. கொன்ஸ்தாந்தி நோபிள் 3. ஜினோவா 4. வெனிஸ்

25) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வழங்கிய பெயர் யாது ?

1. சிலோன் 2. செரண்டிப் 3. ஹெலதிவ 4. செய்லான்

26) ரன்தெனிவல போரின் போது போர்த்துக்கேயர் படைக்கு தலைமை தாங்கிய சேனாதிபதி யார் ?

1. அபொன் சுத லசர்தா 2. ஜெரனிமோ த அஸவேது

3. கொன்ஸ்தந்தினு த சூசா 4. தியோகோ த மேலோ

27) கைத்தொழில் புரட்சியின் போது “மெக்கடம் முறை” பயன்படுத்தப்பட்டது எத்துறையில் ஆகும் ?

1. தொலைத் தொடர்புத் துறை 2. போக்குவரத்துத் துறை

3. விவசாயத் துறை 4. அரசியல் துறை

28) இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தங்களில் கைத்தொழில் துறையில் பாரிய முன்னேற்றத்தை கண்ட ஆசிய ஆண்டு யாது ?

1. சீனா 2. மலேசியா 3. சிங்கப்பூர் 4. ஜப்பான்



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

29) கொழும்பு - கண்டி பிரதான வீதியை அமைக்க முன்னின்ற பிரித்தானிய ஆளுநர் யார் ?

1. ஹென்றி வோட் 2. டொரிங்டன் பிரபு 3. எட்வட் பாண்ஸ் 4. தோமஸ் மெயிட்லண்ட்

30) கி.பி. 1795 ஆகஸ்ட் மாதம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் ஒல்லாந்த கோட்டை யாது ?

1. திருகோணமலை 2. மட்டக்களப்பு 3. மன்னார் 4. கொழும்பு

31) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய மலையக மன்னன் யார் ?

- நாயக்கர் வம்சத்தவர் சொற்படி தீர்மானங்கள் எடுத்தல்.
- பத்திருப்பை அமைத்தல்.
- போகம்பர வாவியை விரிவுபடுத்தல்.

1. கீர்த்தி சிறீ இராஜசிங்கன் 2. சிறீ விக்ரம இராஜசிங்கன்

3. சிறீ விஜய இராஜசிங்கன் 4. இராஜாதி இராஜசிங்கன்

32) கி.பி.1848 சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த வரி வகைகளை விதித்த ஆளுநர் யார் ?

1. ரொபட் பிரவுன்றிக் 2. தோமஸ் மெயிட்லண்ட்
3. டொரிங்டன் பிரபு 4. வில்லியம் கிரகரி

33) கிறிஸ்தவ மதத்தை வடக்கு,கிழக்கில் பிரச்சாரம் செய்த மிசனரிப் பிரிவு யாது ?

1. லண்டன் 2. சேர்ச் 3. அமெரிக்கன் 4. வெஸ்லியன்

34) பஞ்ச மகா விவாதங்களில் சர்வதேச மட்டத்தில் பிரசித்தமான விவாதம் யாது ?

1. வராகொட விவாதம் 2. கம்பளை விவாதம் 3. பாணந்துறை விவாதம் 4. பத்தேகம விவாதம்

35) "மதரஸா" என்னும் முஸ்லிம் பாடசாலைகளை சீர்திருத்தம் செய்த தேசிய தலைவர் யார் ?

1. டீ.பீ.ஜாயா 2. சித்திலெப்பை 3. ஆறுமுக நாவலர் 4. பொன்னம்பலம் அருணாச்சலம்

36) பின்வரும் A, B, C, D யின் கூற்றுக்களில் டொனமூர் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய கூற்று எது ?

A. இலங்கை 5 மாகாணங்களாக பிரிக்கப்படல்.

B. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை முறை அறிமுகப்படுத்தப்படல்.

C. இரு சபை பாராளுமன்றம்

D. நிறைவேற்று குழுமுறை அறிமுகப்படுத்தப்படல்.

1. B 2. A 3. C 4. D

37) இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார் ?

1. பொன்னம்பலம் அருணாச்சலம் 2. பொன்னம்பலம் இராமநாதன்
3. ஜேம்ஸ் பீரிஸ் 4. டீ.பீ.ஜயதிலக்க

38) தேயிலை, இறப்பர், தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை யாது?

1. தலவாக்கலை, லுணுவில, அகலவத்த 3. தலவாக்கலை, அகலவத்த, லுணுவில
2. லுணுவில, அகலவத்த, தலவாக்கலை 4. லுணுவில, தலவாக்கலை, அகலவத்த

39) பிரித்தானியர் ஆட்சி காலத்தில் உருவான தொழிலாளர் வகுப்பு தொடர்பான பிழையான கூற்று யாது ?

1. வேலை நேரம் வரையறுக்கப்படவில்லை.

2. தோட்டத் தொழிலாளர், சுதேச தொழிலாளர் என இரு பிரிவினர் காணப்படல்.

3. தொழிலாளர்களுக்கு உயர்ந்த வேதனம் வழங்கப்படல்.

4. தொழிலாளர் நலன்புரி சேவைகள் காணப்படவில்லை.

40) 1972 ஆம் ஆண்டு யாப்பில் சட்டம் இயற்றும் சபைக்கு வழங்கப்படும் பெயர் யாது ?

A. சட்ட சபை B. தேசிய அரச சபை C. தேசிய அரசுப் பேரவை D. பாராளுமன்றம்

1. A 2. B 3. C 4. D


www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources
iexamhub

සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024 / Second Term Test - 2024

| ශ්‍රේණිය / தரம் / Grade | வரலாறு - II | කාලය / நேரம் / Time |
|---|---|---|
| 11 | | 03 மணி |

නම / பெயர் / Name ..............................................................
විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ........................................

அறிவுறுத்தல்கள்

- ❖ பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III ல் ஒரு வினாவுக்கும் விடை தருக.
- ❖ விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறாகும்.

---

## பகுதி I

01) (அ). வினா I ல் தரப்பட்டுள்ள வரலாற்றுத்தலங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், வினா II ல் வழங்கப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. யோத வாவி, மினிஹாகல்கந்த, முல்லைத்தீவு, காலி, மின்னேரியா வாவி, கிரிந்தி ஓயா, கோகண்ணதித்த, செங்கடகல, கந்தரோடை(கதுறு கொட), தெதுறு ஓயா, அநுராதபுரம், கலாதித்த (12 புள்ளிகள்)

II. பிரித்தானியா, இத்தாலி, லிஸ்பன், வங்காளவிரிகுடா, சென்னை, ஜாவா (06 புள்ளிகள்)

(ஆ). பின்வரும் A, B, C, D வினாக்களுக்கான விடைகளை ஒழுங்குமுறைப்படி விடைத்தாளில் எழுதுக.

A- பலமான படை ஒன்றின் மூலம் சோழர்களை தோல்வியடையச் செய்து நாட்டை ஒற்றுமைப்படுத்திய மன்னன்.

B- அநுராதபுர இராசதானியில் காய்ச்சல் நோயினால் பிடிக்கப்பட்ட நோயாளர்களுக்காக அமைக்கப்பட்ட வைத்தியசாலை.

C- கி.பி.1815 இல் மலையகத்தை கைப்பற்றிய ஆங்கிலேய ஆளுநர்.

D- இலங்கையில் முதன் முதலாக தேயிலை பயிரிட்ட ஆங்கில இனத்தவர்.

(04 புள்ளிகள்)

- A,B யில் உள்ள படங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

A. I. உரு A யில் காட்டப்படுவது யாது ?

II. இது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

III. இது ஆக்கப் பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது ?

IV. புராதன பொருளாதாரம் தொடர்பாக இதனால் புலப்படும் விடயங்கள் யாவை ?

(04 புள்ளிகள்)



உரு A



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources


B. I. உரு B யில் காட்டப்படுபவர் யார் ?

II. இவருக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர் யாது ?

III. டொனமூர் யாப்பின் கீழ் இவர் வகித்த பதவி யாது ?

IV. இவர் தலைமை தாங்கி அமைத்த அபிவிருத்தி திட்டம் யாது ?

(04 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

02) I. தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்களை எழுதும் போது தாக்கம் செலுத்திய நூல்கள் யாவை ? (03 புள்ளிகள்)

II. பின்வரும் இலக்கிய மூலாதாரங்களை எழுதிய நூலாசிரியர்களை குறிப்பிடுக.

A. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா

B. மகாவம்சத்தின் முதல் பகுதி

C. டிமுன்டோ

D. அன்றைய இலங்கை (04 புள்ளிகள்)

III. இலங்கை வரலாற்றை கற்கும் போது தொல்பொருள் மூலாதாரமான கல்வெட்டுக்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை இரண்டு காரணங்களூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

IV. வரலாற்றை கற்பதன் மூலம் நாம் அடைந்து கொள்ளக்கூடிய பயன்கள் மூன்றை விளக்கிக் காட்டுக. (06 புள்ளிகள்)

03) I. கற்கால மனிதர்கள் வாழ்ந்த ஈரவலய கற்குகைகள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் பயன்படுத்திய மரணச்சடங்கு முறைகள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. வரலாற்றுக்கு முற்பட்ட மக்களின் தொழில்நுட்ப முறைகளை இரண்டு விடயங்களூடாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. முன் வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் தன்மையை மூன்று விடயங்களூடாக தெளிவுபடுத்திக் காட்டுக. (06 புள்ளிகள்)

04) I. புராதன இலங்கையில் பிக்குகளின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட பொய்கைகள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. முற்காலத்தில் பாரிய குளங்களை அமைத்தமைக்கான நோக்கங்கள் இரண்டை கூறுக. (04 புள்ளிகள்)

III. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட விஞ்ஞான ரீதியான கருத்துக்களை பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டை சுருக்கமாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. இலங்கையில் காணப்பட்ட புராதன நீர்ப்பாசன தொழில்நுட்பத்தின் மேன்மையை பின்வரும் குளத்தின் பகுதிகள் ஊடாக விளக்குக.

A. குளக்கட்டு

B. அலைதாங்கி

C. கலிங்கல் (06 புள்ளிகள்)

05) I. முற்காலத்தில் பிரபுக்களாக மதிக்கப்பட்ட மக்களுடன் வைத்து மதிக்கப்பட்ட தொழில்துறையினர் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. சமூக அமைப்பில் காணக்கூடிய பிரதான இரு பிரிவினர்களும் யாவை ? (04 புள்ளிகள்)



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

III. இந்நாட்டு புராதன ஆட்சியாளர்கள் சுற்றாடலை பாதுகாக்கும் நோக்கத்துடன் சட்டங்களை பிறப்பித்தார்கள் என்பதை இரண்டு உதாரணங்களை கூறி தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

IV. இலங்கையின் புராதன சமுதாயத்தில் பெண்கள் கௌரவமாக மதிக்கப்பட்டமையை மூன்று விடயங்களுக்காக தெளிவுபடுத்திக் காட்டுக. (06 புள்ளிகள்)

06) I. கண்டி இராசதானியை அழைக்க பயன்படுத்திய வேறு பெயர்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய அரசர்களை பெயரிடுக

A. கி.பி.1638 இல் ஒல்லாந்தர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கண்டி இரசதானி மன்னன்

B. தெல்கமுவ விகாரையில் மறைத்து வைத்திருந்த தந்ததாதுவை கண்டிக்கு கொண்டு வந்து பூஜைகள் மேற்கொண்ட மன்னன்

C. வெலிவிட்ட சரணங்கர தேரர் அவர்களுக்கு சங்கராஜ பதவியை வழங்கிய மன்னன்

D. கி.பி.1796 இல் ஆங்கிலேயர் கரையோரத்தை கைப்பற்றும் போது கண்டியை ஆட்சி செய்த மன்னன்

(04 புள்ளிகள்)

III. (a). கண்டி இராசதானியின் நிர்வாகத்தில் உயர் ஸ்தானத்தில் போற்றப்பட்ட மன்னனின் பிரதான காரியங்கள் இரண்டை குறிப்பிடுக.

(b). அரசனால் விசாரிக்கப்பட்ட மூன்று வகையான வழக்குகளை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

IV. கண்டி இராசதானியின் பொருளாதார வழிமுறைகளை மூன்று காரணங்களை அடிப்படையாக வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

07) I. பிரித்தானியர் ஆட்சி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A. பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்தியமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக.

B. கியூ கடிதத்தில் கைச்சாத்திட்ட ஒல்லாந்த ஆட்சியாளன் யார்

(03 புள்ளிகள்)

II. பின்வரும் வினாக்களுக்கான சரியான விடைகளை எழுதுக.

A. 1818 சுதந்திர போராட்டத்திற்கான உடனடி காரணம் யாது ?

B. இரண்டாம் சுதந்திரப் போராட்டம் வலுப்பெற்ற பிரதேசம் யாது ?

C. இஸ்லாமிய மத மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி யார் ?

D. இந்நாட்டு தேசிய மத மறுமலர்ச்சியின் போது அமைக்கப்பட்ட முதலாவது அச்சகம் யாது ?

(04 புள்ளிகள்)

III. இந்து மத மறுமலர்ச்சியில் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் செயற்பாங்கை இரண்டு காரணிகள் ஊடாக விளக்குக. (05 புள்ளிகள்)

IV. பௌத்த மத மறுமலர்ச்சியின் போது இந்நாட்டு பௌத்த மதகுருமார்களிலும் பொதுமக்களிலும் இருந்த அறிஞர்கள் செயல்பட்ட முறையை மூன்று காரணங்களுக்காக விளக்குக. (06 புள்ளிகள்)


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

## பகுதி III

08) I. அறிவு வளர்ச்சி காரணமாக மறுமலர்ச்சிக் காலத்தில் திருச்சபை ஆதிக்கத்தை விமர்சித்த மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. மறுமலர்ச்சி காலத்தில் பின்வரும் படைப்புக்களையும், கண்டுபிடிப்புகளையும் படைத்த நபர்களின் பெயர்களை கூறுக.

A. மொனாலிசா

B. தொலைநோக்கி

C. கோள்கள் சூரியனை சுற்றி நீள் வட்ட பாதையில் பயணிக்கின்றன

D. நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றுக்கான சிகிச்சைகளையும் கண்டுபிடித்தல்

(04 புள்ளிகள்)

III. மறுமலர்ச்சி காலத்தில் மொழி, இலக்கியத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை இரண்டு காரணங்கள் ஊடாக விளக்கி காட்டுக. (05 புள்ளிகள்)

IV. மறுமலர்ச்சி காலத்தில் ஐரோப்பிய அரசியல், பொருளாதார துறைகள் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

09) I. பிரித்தானியா தவிர்ந்த கைத்தொழில் புரட்சி பரவலடைந்த ஏனைய ஐரோப்பிய நாடுகள் மூன்றைத் தருக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட விஞ்ஞானிகளை பெயரிடுக.

A. ஆகாய விமானம்

B. பாதுகாப்பான விளக்கு

C. புகையிரத எஞ்சின்


D. தொலைக்காட்சிப் பெட்டி

(04 புள்ளிகள்)

III. கைத்தொழில் புரட்சி உலக பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை இரண்டு காரணங்கள் மூலம் விளக்கி காட்டுக. (05 புள்ளிகள்)

IV. கைத்தொழில் புரட்சி இலங்கையின் விவசாயம், போக்குவரத்து துறைகளில் ஏற்படுத்திய செல்வாக்கை விளக்கிக் காட்டுக. (06 புள்ளிகள்)


www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources
iexamhub





iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources



PAST PAPERS



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources
iexamhub